# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
# The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ அதிவிசேஷமானது EXTRAORDINARY

අංක 922/9 - 1996 මැයි 09 වැනි බ්‍රහස්පතින්දා - 1996.05.09
922/9 ஆம் இலக்கம் - 1996 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி வியாழக்கிழமை
No. 922 / 9 – THURSDAY, MAY 09, 1996

(ආණ්ඩුවේ බලය පිට ප්‍රසිද්ධ කරන ලදී.) (அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது) (Published by Authority)




# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. – பி. 21/78 IV.

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டம்

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் கட்டளைச் சட்டம்.*

எம். ஏ. முனிதாச,
பதில் செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள்
ஆணைக்குழு.

கொழும்பு,
1996 மே 02.

### கட்டளைச் சட்டம்

1. இக் கட்டளைச்சட்டம், 1996 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவக (திருத்த) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன்மேல் வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டு ஏப்பிறல் 10 ஆந் தேதிய 83/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அதன் 7 ஆம் பந்தியின் 2 ஆம் உபபந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும் :–
"ஆயின், எவ்வாறாயினும், இரண்டு அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு மேல் ஆளெவரும் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுதல் ஆகாது."

(2) அதன் 10 ஆம் பந்தியின் (1) ஆம் உபபந்தியின் (ஊ) என்னும் வாசகத்தை நீக்கி விடுவதன் மூலமும்.